# மக்காச்சோளத்தின் விலை தீவணத் தேவையால் அதிகரிக்கும்

வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீட்டின் படி, 2018 -19 ஆண்டில் மக்காச்சோளம் 93.00 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 278.20 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டில், மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம், கர்நாடகா, பீகார், தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மக்காச்சோளத்தை அதிகளவு பயிரிடுகின்றன. தமிழ் நாட்டில், சேலம், திண்டுக்கல், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோளம் அதிகளவு பயிரிடப்படுகின்றது.

வர்த்தக மூலகங்களின் படி, தமிழகத்தில் மக்காச்சோள பரப்பு மற்றும் உற்பத்தியானது தாமதமான பருவ மழையால் நடப்பு பருவத்தில் சென்ற ஆண்டை விட குறைவாக இருக்கும் என கருதப்படுகிறது. மேலும் மக்காச்சோள படைப் புழுவின் தாக்கம் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படும் மாநிலங்களில் பரவலாக காணப்படுவதால் உற்பத்தி பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே, தீவண தொழிற்சாலைகள் மாற்று தானியங்களான கோதுமை, ரை மற்றும் உடைத்த அரிசி ஆகியவற்றை கொள்முதல் செய்கின்றனர். மக்காச்சோளத்தின் விலையானது கர்நாடக வரத்து மற்றும் இறக்குமதியை பொறுத்து மாறுபடும்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 19 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளம் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், தரமான மக்காச்சோளத்தின் பண்ணை விலை அறுவடையின் போது (செப்டம்பர் –அக்டோபர்'19) குவிண்டாலுக்கு ரூ. 2300 ஆக இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயமுத்தூர்-641 003*
*தொலைபேசி- 0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*சிறு தானிய துறை*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி எண் :- 0422-2450507*